உ
ஓம் சக்தி ஓம்

தமிழக்கலை
ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் மடியில்
திருவருள்மிகு

# தேன்தமிழ் ஞானத்தென்றல்



ஆக்கம் - ஸ்ரீகவிசரஸ்கலாமணி
ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் தேவஸ்தானம்
அறங்காவலர் — காரைநகர்.
15—06—2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்

## ஆலய வெளித்தோற்றம்.









தற்போதைய ஆலய பிரதம குருவும், அர்ச்சகருமான
ஸ்ரீ கவிசரஸ்கலாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக்கலை ஸ்ரீ முத்துமாரி
அம்பிகையின் மடியில்
திருவருள்மிகு

# தேன் தமிழ்

# ஞானத்தென்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக்கலை ஸ்ரீ முத்துமாரி
அம்பிகையின் மடியில்
திருவருள் மிகு

# தேன் தமிழ்

# ஞானத்தென்றல்



ஆக்கம்- ஸ்ரீ கவிசரஸ்கலாமணி
ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள்
தேவஸ்தானம் அறங்காவலர்
காரைநகர்.

தற்போதைய விலாசம்:-
ஸ்ரீ கவிசரஸ்கலாமணி தமிழக்கலை திருவருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு அர்ச்சகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அணிந்துரை

காரைநகர் ஊரை வசிப்பிடமாகக்கொண்ட மிகு ஸ்ரீ வாலை சரஸ்வதி தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாவுமாகிய ஸ்ரீ கவி சரஸ் கலாமணி ஆசிரியர் அவர்கள் அம்பிகையின் அருளால் யாழ்ப்பாணத்திலுள்ள கோவில்களைப் பற்றி பலவிதமான இனிய நூல்களை இயற்றிய சைவப்பெரியார் -களின் நன்மதிப்பை பெற்றுள்ளார்.

சைவ மக்கள் இலகுவாகப் படித்து பத்திப்பரவசம் அடையும் வண்ணம் நயங்கள் ஒழுங்கேகையாண்டு திருவாளர் ஸ்ரீ கவி சரஸ் கலாமணி அவர்கள் "ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் மடியில் திருவருள் மிகு தேன் தமிழ் ஞானத்தென்றல்" என்னும் மலரைத் தொகுத்துள்ளார். இதன் மூலம் அன்னாரின் பக்தியும், சமயத்தின் மேற்கொண்ட அளவிலாப் பற்றையும் எடுத்துக் -காட்டுகின்றது. அன்னாருக்கு அம்பிகையின் அருள் கடாட் -ஷம் கிடைக்கப்பெற்று இன்னும் பல நூல்களைப் பாட வேண்டும், நாமும் அதன் மூலம் ஆன்மா ஈடேற்றப் பெற வேண்டும்.

இவர் மேல் மேலும் வளர்ந்து! நீடுழி வாழ வாழ்த்தி!! அம்பிகை அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

தொடர்க அன்பரது பணிகள்

A. K. அம்பலவாணர்
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க/ கதிரேசன் க. வி
நாவலப்பிட்டிய

திரு. K.சுப்பிரமணியம்
அதிபர்

# அணிந்துரை

அஞ்ஞான தீபம் எங்கும் பெருகி ஓடும் இக்காலத்தில் ஞான ஒளிபரப்ப நாவல் நகரத்திற்கு வந்துள்ள திரு. ஸ்ரீ கவி சரஸ்கலாமணி எமக்கு ஓர் இறையருளே யாகும். இவர் பல அம்பிகையின் அருள் பெற்றதுடன் அவ்வருளை நாமும்பெற வழிகாட்டும் ஓர் வழிகாட்டி.

சொற்தெளிவுடன்

பொருள் விளங்க இவர் இயற்றியிருக்கும் "தேன்தமிழ் இசை ஞானத்தென்றல்" உண்மையிலேயே தேனினும் இனியவை யாகும்.

இறையருள் பெற வழிகாட்டும் இந்நூலை இயற்றியமைக்காக இவரை நாம் என்றென்றும் போற்ற வேண்டும் இவ்வாறு எம் முத்தி நிலைக்கு ஏணி போல் இருக்கும் இவர் நீண்ட ஆயுள் பெற்று இறை பணி வளர்த்து வாழ வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

திருவாளர் ஸ்ரீ கவி சரஸ்கலாமணி அவர்கள் சைவமும் தமிழும் தலைத்தோங்கி விளங்கும் யாழ்திருமண்ணில் உதிர்த்த ஞான சுடர்ஆவார் இவர் அம்பாளிடம் பெற்ற ஞான ஒளியால் பாமரர்கள் பக்தியால் பாடிபரசவம் அடையும் வகையில் பல மலர்களை வெளியிட்டு மக்களின் அபிமானத்தைப் பெற்றவர்.

இவரின் அரும் பணி மேலும் வளர வேண்டும் என்று எல்லாம் வல்ல மாணிக்கப்பிள்ளையார் அருள் வேண்டி பிராத்திக்கிறேன்.

சிவ ஸ்ரீ சோமஸ்கந்த தியாகராஜா குருக்கள்
மாணிக்கப்பிள்ளையார் கோவில் உற்சவ பிரதம குரு
செல்லக்கதிர்காமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி ஓம்

# ஆசிரியர் முகவுரை

தமிழ்மக்கலைத் தேன் தமிழ்த் தென்றலைத்
தேடிப் பேரானந்தம் பெறுவோம்

பிரணவப் பொருளாம்
பெருந்தொகை ஐங்கரன்
சரண அற்புத மலர்
தலைக்கணிவோமே!

அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்
நன் நயங்கள் விளைய
நன்மைகள் செய்வோம்
நமக்கென உள்ளதைப்
பிறருக்கும் உதவுவோம்

திருஞானந்தரும் கடவுள் எப்படிப்பட்டவராய் இருந்தாலும், அது குழந்தைக் கையில் இருக்கும் தித்திக்கும் கற்கண்டைப்போன்றது சிலர் அதில் கொஞ்சம் தரும்படி கேட்டுக்கெஞ்சினாலும் கூட அக்குழந்தை அவர்கட்குக் கொடுக்கச் சற்றும் நினைப்பதில்லை? ஆயினும் தான் விரும்புமின்ற வேறொருவர் கையில் வெகு சுலபமாக அதைக் கொடுத்து விடுகிறது.

இதுபோன்று கடவுளின் தெரிசனம் பெற வாழ்நாள் முழுவதும் தவம் செய்யும் மனிதன் வெற்றி பெறுவதில்லை? ஆனால் எவ்வித சிரமமுமின்றி மற்றொருவர் அதனைப் பெற்று விடுகிறார், அது கடவுளின் கருணையைப் பொறுத்தது. இறைவன் பக்குவமுள்ள எவரை விரும்புகிறானோ? அவனிடம் கருணை காட்டுகிறான். ஆதலினால்! நாம் மனுதர்மம் கூறும் தர்மலட்சணத்தின்படி பொறுமை, மன்னிப்பு, மனஉறுதி, புலனடக்கம், கள்ளாமை, தூய்மை, ஞானம், அறிவு, சத்தியம், கோபமின்மை, ஆகிய பத்துப்பண்புகளையும் இறைவன் மேல் நம்பிக்கை வைத்து கடைப்பிடித்துத் தர்மலட்சணத்துடன் தியானிப்போமானால் எல்லாம் வல்ல இறைவன் இறைவியர், எவர்க்கும் கசிந்தருளிய முன்வந்து திருவடிகளைத் தந்து பரிசோதித்து ஆட்கொள்ளுவார் என்பது திண்ணம்.

இந்தத் தேன் தமிழ்த் தென்றல் என்ற நூல் அம்பிகையின் திருவருளினால் பக்தியைத்தரும் தன்மையில் அமைந்துள்ளது அன்பர்கள் அடியார்கள், தொண்டர்கள் அனைவரும் வாங்கிப்படித்து ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருட்கடாட்சத்தைப் பெற்று வாழ்விர்களெனப் பிரார்த்தித்து மண்டாடி வாழ்த்திப் போற்றி வணங்குகின்றேன. மேலும் இந்த நூலை ஆக்கம் செய்து வெளியிட வைத்த திருவருள மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் திருப்பொற்பாத கமலங்களில் சமர்ப்பித்து என்றும் போற்றிச்சரணம் அடைந்து பணிந்து வாழ்த்திப் போற்றுகின்றேன்

இந்நூலை வெளியீடு செய்து வைக்கும் பெரியோர்கட்கும் ஆலய சபையினர்க்கும் மற்றும் அன்பர் அடியார் அனைவர்க்கும் எனது நன்றியும் வாழ்த்தும் என்றும் உரியதாகட்டும்.

வணக்கம்

[illegible]

ஸ்ரீ ரவிசரன் கலாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி ஓம்

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்
நன்றே செய்கினும்
இன்றே செய்க வருக! வருக!

அன்பர்களே! அடியார்களே!
சமயப்பணியில் தம்மை அர்ப்பணித்த தொண்டர்களே! எல்லோர்க்கும்
வணக்கம்

நீலக்கடல் சூழ் எழில்மிகு இலங்கைத் திருநாட்டில் இயற்கைத் திருநாட்டில் இயற்கை வளமிகு நவரெத்தின மணிகள், விளைவ தோடு தேயிலை, றப்பர், கிராம்பு, கறுவா, ஏலம் முதலியன விளையும் மலையகத்தில் பிரசித்திபெற்ற கதிர்காமம் மலையப்பதியும் மாவலி கங்கை வணங்கொலிக்கவும் சிறந்து விளங்குவதான அக்கரைப்பத்தனை வேவள்ளிக்குருப்பில் மகாமகத்துவம் வாய்ந்த திருவருள் அல்லச் சுரந்திருந்து எம்மை வாழ்வித்து வரும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் வழிபட்டு வந்த மூதாதையர்களின் பக்திப்பெருக்கால் இன்று அவர்கள் பரம்பரையில் வந்த குழந்தைகளாயிருக்கும் நாங்கள் பலவருடங்களாக அம்பிகைக்கு அழகிய திருக்கோவிலொன்றை அமைக்க எண்ணிச்சிந்தித்து வழிபட்டு வந்தோம் எம் மூதாதையர்கள் தவப்பயனாலும் எம்மவர் இடைவிடா முயற்சியினாலும், இந்தக் கஷ்டமான காலமாயினும் அம்பிகையின் திருவருளால் ஆங் 1999 - 07 - 14ந் திகதி காலை 11.00 மணி தமிழ் ஆனி மாதம் 30ம் நாள் புதன் கிழமை கிரியாரெத்தினம் பிரதம ஸ்ரீ சிவசந்தான கிருஷ்ண சர்மா அவர்களும் கிரியாரெத்தினம் பிரதம ஸ்ரீ சிவசங்கரக்குருக்கள் அவர்களும் கும்பாபிஷேகத்தலைமைக் குருக்களாக இருந்து ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் ஆலய கும்பாபிஷேகத்தை மிகச் சிறந்த முறையில் திருப்தியாக நிறைவு செய்து மண்டலாபிசேகத்தையும் அம்பாளுக்கு வேண்டிய ஆகம விதிப்படி பிரம்ம ஸ்ரீ சிவசந்தான கிருஷ்ண சர்மா அவர்களின் ஆலோசனைப்படி அவ்வருடத்திருவிழா வையும் முடித்து பின்பு நாளாந்த பூசைகளையும் அவர் விருப்ப ப்படியே செய்து வந்த காலத்தில் எமக்கு நல்ல ஓர் பூசகரைத் தரும்படி பலமுறை கேட்டு வந்தோம் அதன்படி இவர் எமக்குத் தருந்தவராம் ஸ்ரீ கவிசரஸ் கலாமணிக்குருக்கள் அவர்களை எமது ஆலயத்திற்கு வந்து பூசை செய்து வரச்செய்தார், நாம் மனப் பூர்வமாக எம் அம்பிகைக்குப்பூசைகளைச் செய்து வரும்படி பிரதம குருக்களாக ஏற்றுக்கொண்டோம். அவர்கள் தம் பேரருள் ஆற்றலினால் ஆலயத்திற்கான கடமைகளையும் செய்தும் ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் பேரில் திருப்பொன் ஊஞ்சல் பதிக மலரையும் அச்சேற்றிப்புஸ்தகத்தை அம்பாளின் பாதார விந்தங்களில் சமர்ப்பித்து எமக்கும் தந்துள்ளார் இவ் ஊஞ்சல் பாக்களைப்பாடி சிவராத்திரி திருவுலாவின் போது அம்பிகையை ஊஞ்சலாட்டி எம்மிடம் ஒப்படைத்துள்ளார்.

மேலும் இந்த வருசம் திருவுலாவையும் எம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயப்பிரதம குருவாக இருந்த பிரம ஸ்ரீ சிவசந்தான கிருஷ்ண சர்மா குருக்கள் ஐயாவின் ஆலோசனைப்படி சேர்ந்து நடத்திவைப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திருவிழாவின் போது எங்கள் கோவில் குருக்களான பிரம்ம ஸ்ரீ கவிசரஸ் கலாமணி அவர்கள் "தேன் தமிழ்த்தென்றல்" என்ற நூலையும் அம்பிகைக்கு பிரியமாக இத்திருவுலாவின் போது வெளியீடு செய்து பொதுமக்களுக்கு உதவும் வண்ணம் அம்பிகையின் திருவருள் பாலித்துள்ளது. இந்த பக்தி நூலான (தேன்தமிழ்த்தென்றல்) என்ற நூலை வெளியீடு செய்து வைக்கும் பெரியார்களுக்கு எமது நன்றியும் வணக்கமும் உரியதாக அம்பாளை வேண்டி மன்றாடுகின்றோம் வாழ்த்துகின்றோம் எங்கள் அம்பாளின் கும்பாபிஷேகத்தையும் செய்து மேலும் இந்த ஆண்டு திருவுலாவையும் மிகச்சிறந்த முறையில் நடத்தி வரும் பிரம்ம ஸ்ரீ சிவசந்தான கிருஷ்ண சர்மா குருக்கள் அவர்களுக்கும் எங்கள் உளம்கனிந்த நன்றியையும் வணக்கமும் என்றும் உரியதாகட்டும். எமது ஆலய குருக்களான ஸ்ரீ கவிசரஸ் கலாமணி குருக்கள் அவர்களுக்கும் எங்கள் நன்றியும் வணக்கத்தையும் தெரிவித்து அம்பாளை மன்றாடித்துதித்து என்றும் வணங்கி வாழ்த்துகின்றோம். அம்பாளின் திருவுலாவில் பங்குகொண்டு பல உதவிகளையும் பொருள் உதவிய பலருக்கும் எங்களின் ஆலோசனைகளையும் ஏற்று இத்திருவுலாவின் போது சகல உதவிகளையும் செய்துவரும் அம்பிகை அடியார்களுக்கும் எமது நன்றியும் வணக்கமும் உரியதாக மன்றாடுகின்றோம் வாழ்த்துகின்றோம் வணக்கம்.

இங்ஙனம்

| | |
|---|---|
| திருவருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய | S. ஆறுமுகம் |
| சபைத்தலைவர்களும், பொதுமக்களும் | S. அருணாசலம் |
| 12 - 07 - 2000 | M. மனோகரன் |

***********---------------------------------------------------***********

## விநாயகர் துதி

### திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆறு முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகனதனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

### விநாயகர் துதி

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுரை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல கலாவல்லி மாலை

1 வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழு: அழித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான சுவை கொள் கரும்பே
சகல கலா வல்லியே!

2 நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணிந்தருள் வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே!

3 அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
களிக்கும் பழக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே!

4 தூக்கும் பனுவற் துறை தோய்ந்த
கல்வியும சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்
வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக்கடலே
சகலகலா வல்லியே!

5 பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுங் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலா வல்லியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே!

7 பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப்பேடே
சகலகலா வல்லியே!

8 சொல்லிற் பணமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகலகலா வல்லியே!

9 சொற்கும் பொருட்டும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகலகலா வல்லியே!

10 மண்கண்ட வெண்குடைக்கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ?
சகலகலா வல்லியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி ஓம்

# நவராத்திரி காலத்துதவிடும் பஞ்சாமிர்தச்சுவை நீ அம்மா

ஸ்ரீ கவிசரஸ் கலாமணி ஆக்கம்

## காப்பு

கரிமுகரென் கருத்தில் முன்இருந்து காக்க
உரிமையுடன் ஸ்ரீ முருகனும் வைரவரும் என்றும் காக்க
அரியும் அரனும் பிரமரும் நித்தமென் நினைவிற்காக்க
திரிபுரை நமசிவய மென் நாவிற்சுவைத்தின்புளக்காகவே.

## கலை வாணி காப்பு

உள்ளும் கருத்து உரைக்கவரும் சொல்விருந்து
கொள்ளும் சுவையோ கொடுகின்ற - வள்ளலவள்
தாயாம் கலைவாணி தண்ணருளைத் தந்தருள
ஏயவரும் எல்லாம் இனிது.

## பஞ்சாமிர்தம்

1

அண்ட பகிரண்டமெலாம் நிறைந்தாதி அந்தமற்ற
அற்புதச்சிவரூபி ஒளிகாட்டி அணுமின் அணுவொளியுந்
கொண்டாடிடும் மகிடி இசையால் கருநாகமாடிடக்
கோலவானெங்கும் குடைபிடித்தும்பரு நாரதரும்
விண்ணிணலரும் வீணாகானமுடன் மத்தளகைத்தளம் போட
விண்ணரசி தித்திக்க தகிடிமிதோமெனச் சரஸமிடவும்
கண்கண்ட முனிவரெலாம் பஞ்சாமிர்த ஞானப்பாலுண்டாட
கருணை மழை பொழிந்த வாறுகலைவாணி தருமருள் அமிர்தமே

2

அன்புருக்கும் நமசிவாயம் அமிர்தப்பாலூற்றுக
ஆற்றோட்டமென ஊறிவரும் தென்றலெனவுஞ்
இன்பமுற வான்மழை பொழிந்தவாறு ஞானியருரை
நிறைந்த பூவுலகிற் தேனமுதத்தொல்காப்பியமும்
நன்முறை கூறும் சமதக்கினியாரின் உரைகளும்
நமக்கென்றும் உரைத்தந்த திருமூலர் திருமந்திரமும்
முன்னவர் முப்பாலூட்டிடும வள்ளுவர் திருக்குறளும்
முந்தை பதினெண் முனிவரும் தந்த பல நூல்களும்
பஞ்சாமிர்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்புகழ் மெஞ்ஞான விஞ்ஞான முணர்த்திடத்
தேவாமிர்தமெனஞானப்பாலூட்டிப்பூவின் மகரந்தத்தேனாய்
நாவதிற் சுவைத்தெச்சிவராஜிகளையும் காத்துந்தன்
மயமாக்கும்

நாதவோங்காரி நீ நமின்பமுறத் துன்பந்தீர்ப்பாய்
ஆவலுறக்கற்கப்பலகாவியங்களையும் புராணங்களையும் தந்தே
அநமறைக்கருத்தறிவித்துணரத்தந்த கலையரசி ஓடையுடன்
பாவலங்காரியாகி ஞானமதிதந்தணைத்திடும் தாயே! யுன
பால்பழங்களைச்சேர்த்துதவும் பஞ்சாமிர்தச்சுவையும் நீயே

4

பூவுலகோரெலாம் கண்டறியா மலரும் மணமும் ஆகியே
பூங்கமலத்தேனாள் தன்னாழடிக்கேசரணமானேன்
தேவுலகோர் போற்றும் பூம்பொழிந்தேனாமிர்தமே!
தீந்தமிழ்ப் பாலூட்டும் கற்பக ஞானத்திரிபுரையே
நாவுணவுள் திறநள்புரி நாதாந்தவித்தகியே!
நமசிவாயமெனோதிச்சுவைதின்பமுணர்த்தும
ஆவுதவு பாலோடுபழங்களும் பிசைந்து தேனபாகுடன் கலந்தே
அற்புதமாய் நின்றுதவும் பஞ்சாமிர்தசுவை நீயம்மா

5

தேறுதல் தந்தாள் பஞ்சவர்ணக்கிளியாகி வந்து
தமிழ்க்கலையூட்டும் ஸ்ரீ முத்துமாரி அம்மா
ஆறுதல் தந்தணைத்திடும் நாதவோங்காரி ரீங்காரவண்ணமே
அற்புதமாய் ஆநந்தாரத்துள் ஊறுஞானக்கனியே
கூறுமொழியெலாமுன் மயயே கூறிடச்செய்திடும் சக்தியே!
குவலயத்துன் மகிமைறிந்தின்புறவைத்த மார்பிளே!
நாறுமலரெலாம் தென்றலேடு கலந்தாட்டும் தேனாமிர்தமே
நவசக்தியுனதருட் பஞ்சாமிர்தச்சுவைதருந்தாயே போற்றி

ஸ்ரீ கவிசரஸ் கலாமணி
22 - 6 - 2000

---


KALANETHY MEDICAL CENTRE

KARAINAGAR

JETTY SARAS — Regd No.6523

Herbal Health Care products

Ayurvedic Pharmacy

Reg No 445 33 Soysakelra Road, Nawalpitiya T P; 054-22898


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்தமிழ்த் தென்றல்
# ஸ்ரீ முத்துமாரி அம்மன்
# கும்மிப்பாடல்

**ஸ்ரீ சரஸ்கலாமணி ஆக்கம்**

ஆதியந்தமில்லா அம்மையைப் போற்றிட அற்புதக் கணபதி காப்பாமே
சோதி ஸ்ரீ முத்து மாரியை வலம் வந்து சுற்றிக் கும்மி அடிபோமே

பாதிப்பரனுமை பங்காயிருப்பாளாம். பார்வதி பிரணவ கல்வடிவை
ஓதி யவன்பதம் போற்றி யருள்பெறப் பூ வைத்துக் கும்மி அடிப்போமே.

விண்ணெங்கும்பரவிய வித்தகியாமவள் வீதிவலம் வாராள் இலங்கையிலே
கண்கண்ட தமிழக்கலைத்தெய்வத்தைக்காதலித்தே கும்மி அடிப்போமே

அன்பர்கள் தேடிடும்போதினிலேயன்னை ஆனந்த அலங்கார நடனஞ்செய்து
அண்டியெம் உள்ளத்தே ஆனந்தமூட்டியும் அத்தருள் எல்லாம் ஈவாளே!

நான்மறை வேதங்கள் நாளும்துலங்கிட நாவிற் சரஸ்வதி ஓசைதர
மான்மழு வேந்தியே மாமாரியருளிய என்றும் அரசனுடன் ஆடிவருவாளே!

உச்சி மகுடத்தில் கெங்கைஇழமதி ரவி உலகை வலம் வரும்
காட்சி கண்டோம்
அச்சிவன் உமைமேல்நாகங்களாடவே ஆனந்தம் பெருகவே
பாடியாடிடுவோம்

உள்ளங் குளிரவே எம்குறை கூறிநாம் உத்தமியைச் சுற்றிப் போற்றி வந்து
கள்ளமனத் துன்பங்கண்டு தொலைந்திடக்
கருணையுடன் கும்மி அடிப்போமே

நெற்றி நடுவினில் மின்னுமடி செந்தீ கோர்த்தியாய் முக்கண்ணுர தோற்றமடி
பொற்கமல முகமே போதரவர்க்கண்டும போற்றிக் கும்மி அடிப்போமே

வானமளாவிடும் வண்ணப்பூப்பட்டாடையில் வேடிக்கைக் கோளங்கள்
தோற்றுமடி
ஊனக்கண் பார்வைக்கும் எட்டாதமின்னவள் உள்ளதுப மின்னனு
வாயிப்பாள
மானாட மழுவாட மாமாயி ஒளியாட மின்னவள் சூல்மூந் தோற்றுமடி
ஊனுடல் உயிரெல்லாம், கூடிமகிழவே ஊரெலாஞ் சுற்றியும் வருவாளே!

உண்மை ஒளிகண்டு போற்றியே வாழ்த்திட உள்ளத்துட் சரஸ்கலாமணி
ஓசைதர
கண்கண்ட தெய்வத்தைத் தமிழக்கலையினிற் கண்டென்றும் கும்மி
அடிப்போமே
பூந்தென்றலாலவே பூவாரி வீசியே போற்றினோம் தீபங்கள் ஏற்றி வந்தே
ஏத்தும் ஸ்ரீ முத்துமாரியத்தமிழ்க்கலையிலே என்றென்றும் போற்றி
கும்மி அடிப்போமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி ஓம்

# அம்மையே! அப்பா!

திருச்சிற்றம்பலம்

கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன்
நற்றாழ் தொழாஅ ரெனின்(என்கிறார் திருவள்ளுவர் பெருமான்)
பூர்வ காலத்தவர் இந்து மதம்

உபநிடதப்பிராத்தனை

ஸ ஹ நாவ் அவது ஸ ஹ நௌ புனக்துர் ஸ ஹ
வீர்யம் கரவா வஹ தேஜஸ் வி நாவ் அதீதம்
அஸ்துரா! மா வித் விஷா வனாஹ.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இதன் கருத்து

இறைவன் எம்மைக் காப்பாற்றுவானாக!
எம்மிடத்திற் பிரியம் வைப்பானாக;
நாம் உற்சாகத்துடன் கற்றலில்
ஈடு படுவோமாக;
கற்பதன் மூலம் எம்மிடம் ஞானம்
உதையமாகட்டும்;
நாம் ஒருவரை ஒருவர்
வெறுக்கா திருப்போமாக;
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பொதுவாக முதலாவது உபநிடதப் பிரார்த்தனை

ஓம் சிவசத்தியே! ஓம் நமசிவாய நம
ஓம் ஸ்ரீ சிவ சத்தியே நம;

முற்காலத்து இந்துமதச் சைவச்சான்றோர்கள் யாவரது
பாடல்களிலும் தெய்வம் ஒன்றே என்றுங் கருத்துச்
செறிந்திருக்கக் காணலாம்.

ஒரு நாமம் ஒருருவம் ஒன்று மில்லார்க் காயிரம்
திரு நாமம்பாடி நாந் தெள் ளேணங் கொட்டோமோ?
என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள் மேலும் இவர் முன்பு வேத
உபநிடதக் கருத்துக்களுந் தேவார திருவாசகங்களிலும் மற்றும்
எந்தவிதமான பாடல்களிலும் இக்கருத்தினையே காணலாம்
எனவே, திருமுறைகளை [illegible] தெய்வம் என்றே கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனே ஒருவர்; சிவசத்தியும் ஒன்றேயான பரம் பொருளை நாம் எந்த நாம வடிவங்களிலும் வழிபடலாம்.

இந்து (மதமும்) சமயமும் இப்பரம் பொருளைச் சிவலிங்கமாக வும் எங்கெங்கெலாம் நிறைந்த பரம் பொருட் சத்தியாகவும் வழிபட்டு வந்தமை இந்து மதத்திற் பழமை வாய்ந்த ஒருமரபு என்பதற்குத் தொல் பொருளாராட்சியாளரும் சமய இலக்கியங்களும் சான்றுபகர்கின்றன.

எத்தனையோ முனிவர்களும் ரிஷிகளும் தேவ அடியார்களுங் கூட இப்படி வழிபட்டும், தவஞ்செய்தும்; அவரவர் விருப்பப்படியும் மனநிறைவாக அட்டமா சித்திகளையும் பெற்று பூலோக வாழ் வில் எம்பெருமான திருவிளையாடல்களைக் கண்டு களித்தும் பற்பல வகையான எத்தனையோ உண்மை இரகசியங்களையும் பற்பல மந்திர தந்திர முறைகளையும் கையாண்டும் குருமுறைப் படி கற்றவரும், கல்லாதவரும் கூட தங்கள் பிணி துன்பங்களைக் கூடச் சுகமாக்கி இறைவனை என்றும் மறவாது வாழ்ந்து கொண்டு லிங்கவழிபாடு, கிரகவழிபாடு, விருட்ச வழிபாடு,

பஞ்ச பூதிய தத்துவார்த்த யந்திர பூஜா முறையான வழிபாடுகள் கூடச் செய்து ஆலயங்களை உண்டாக்கியும் முறைப்படி குருக்கள்மார் கூறும் பூர்வ கால சமஸ்கிருத பாராயணங்களாலும் கூட எம்பெருமாட்டியின் திருவருளைப் பெற்றுய்து பரம்பரையாய் சிவசத்தி வழிபாட்டினை மறவாது செய்து நாமும் முந்தையோர் ஞானிகள் கூறும் முறைகளைத் தவறாது கற்று சகல ஐஸ்வரியங் களையும் பெற்றநுபவித்து வாழ்வோமாக!

இப்படியே மேலும் ஆராயுமிடத்து அம்பிகையை வழிபடுவோருக்கு பிறப்பு எது?

பிறப்பு என்று ஏற்பட்டு விட்டால் இறப்பு என்பது கட்டாயம் உண்டு. அம்பிகையின் அன்பர்களுக்கு அத்தகைய இறப்பு வருவதே இல்லை என்கிறார்கள் ஏனெனின் இப்போது பிறந்தது போக, இனிபிறப்பே அவர்களுக்கு இல்லையாம் அதாவது அவர்கள் பெறுவது முத்தி இன்பமே ஆகும்.


அம்பிகையே ஆனந்தவடிவமாக இருக்கிறாள் ''முத்தி ரூபினி'' என்றே லலிதா சகஸ்ர நாமத்தில் அவளுக்கு ஒரு பெயர் உண்டு. அந்த முத்தியை வழங்குவதில் அவளுக்கே நிகர் யாரும் இல்லை அழியா முத்தியானந்தமே என்கிறார் அபிராமி பட்டர் ஆனந்தம என்பது அதிசயப்பேறு எங்கிருப்பினும் அங்கே அம்பிகையின் அருள் விலாசம் நிச்சயமாக இருக்கும் ஆனந்தத்திற்கும் மேலான பரமானந்த ஸ்வரூபினி அவள ஆனந்தமாக இருப்பவள் எனினும் பொருளில் ஆனந்த கலிகா என்றும் மேலானந்த ''பரமானந்த ஸ்வரூபிணி'' என்ற பொருளில் ''பரமானந்தா'' என்றும் அவள் குறிப்பிடப்படுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்ருதம் என்றால் மரணம் என்றாகும் அம்ருதம் என்றால் மரணம் அற்றநிலை அந்த நிலையை வளங்குவது தான தெய் வீகமான மருந்தான "அமிருதம்" அம்மருந்தை வழங்குபவளும் அந்த மருந்தாகவே விளங்குபவளும் அம்பிகையே;

அன்னைபராசத்தியில் துவங்கி துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி தேவிகளைப்பற்றி விரித்து கூறுவதாயின் ஜெகன்மாதாவாக லலிதா சஹஸ்ர நாமங்களில் 1008 திருநாமங்களும் அவளே தான். நவசத்திகளும அவளே தான் கருமாரி, முத்துமாரி காமாட்க்ஷி மீனாட்க்ஷி என்று எத்தனையோ திருநாமங்களும் இதற்கேற்ப வடிவுடையாளாக இருப்பவளும் எங்கள் முன் எழுந் தருளி உள்ள மூல விக்கிர ரூபமாகவும் இருந்து கொண்டு எங்களை எல்லாம் தம்மிடம் வரவழைத்து திருவருளைத் தம மக்களுக்காக அள்ளிச் சொரிபவளாகவும் நவமணிச் சுடர் ஒளி வடிவில் எமக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருந்து கொண்டு தென்றலோடு கூடிய தேனாமிர்தமாகத் திருவருளைத் தந்து காக்கும் அம்பிகையை எப்போதும் என்றென்றும் மறவாது போற்றி வாழ்த்தி வணங்கி வருவோமாக. மேலும் வருங்கால மக்களுக்கும் தாயாரின் திருவருள் கிடைத்து பேரின்ப ஞான முடன் வாழப்பிரார்திப்போமாக. என்றும் வணக்கம் கூறி தமிழக்கலை ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் திருபொறகழல்களில சரணம் சரணம் என்றும் போற்றி வாழ்த்தி மண்டாடி வர என்றும் வாழ்விப்பாயாக.

அடியார்க்கடியேன்
ஸ்ரீவாலை சரஸ்வதி அம்பாள் தேவஸ்தானம்
காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணைக்குருப் அக்கரப்பத்தனை தமிழக்கலை

# திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்

## பதிகம்

*********

### 1

தாயே! யுன் பொற்பதிக் கழைத் தாயேனோ?
தண்ணடிக்கே சரணம் சரணம் அம்மா.
மாயே! மகேஸ்வரி இராச இராசேஸ்வரியே!
மனதார நல் வாழ்வுதவிக் காத்திடம்மா.
நீயே என் சிந்தைக்குள் இருந்திடாயோ?
நின்னருட் புத்தி புகட்டி ஆழ்வாயம்மா
சேயேனைப் பக்குவப் படுத்தி அணைத்திடும்
சிந்தை நிறை தமிழக்கலை முத்துமாரி உமையே!

### 2

மானே! மரகத மயிலே! மாங்குயிலே! என்னுள்
மனதாரவிருந்து விளையாடி மகிழவைப்பாயம்மா
தானே! எங்கெங்கெலாமான வண்ணமின்னணுக்களாகி
தேடரிய பஞ்சபூதியங்களுமாகியே எல்லாமாகி
நானே உனதென் உயிராகி மறைந்திருந் துணர்ந்திடும்
நாதவோங் காரிநலின சிங்கார ரூபியே!
தேனே பூங்காவின் தென்றலே தமிழக்கலைத்
தாயே! ஸ்ரீ முத்துமாரி அம்மை உமையே!

### 3

அன்னையே இவ்வுலகிலாகினாயேன்?
ஆதரிக்க விங்காருமின்றித் தவிக்கின்றேனை
துன்பமுறும் போதினில் வந்தாளாயாமோ?
துர்கையே! திரிபுர சுந்தரியான உமையே!
மின்னுமொளியுள் அரனுடனாடும் ஓங்காரியே!
மேதினியில் இது வேளை வந்து காத்திடம்மா
மன்னு புகழ் மலை யெலாமாடி வரும் நவசத்தியே!
மாதவர் போற்றும் தமிழக்கலை முத்துமாரி உமையே!

### 4

எத்தொழிலைச் செய்தாலும் மனமாறுதில்லையே!
ஏழை எனைச் சோதிக்காதே! அம்மா
பத்திதரப் பொற்பதிக் கழைத்த தாயே! என்னைப்
புனிதப்படுத்திப் பொன்னடி சேர்த்திடாயோ?
நித்தமும் சகல கலை கற்பித்து வருமென் தாயே!
நின் திருவடி மறவா திருக்க வைத்திடம்மா
சத்தியமே என்றும் முன் போற்றி வாழ்ந்திட வேண்டினேன்
சிந்தை நிறை தமிழக்கலை ஸ்ரீ முத்துமாரி உமையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

சங்கரி சௌவுந்தரியே! சதுர் முகன் போற்றிடச்
சபைதனில் வந்து நடமாடும் தாயே! நீ
பொங்கரி மாலின் பொன்னடி தழுவி யென்றும்
புதுப்பொலிவுடன் வந்திடும் மாலினியே
எங்கள் குலந்தழைத்திட எழில வடிவுடனாடும்
ஏரம் பரைப் பெற்ற கருமாரி எமைக் காத்திடும்
சங்கம்புகழும் முருகனிற்கும் வேல்கொடுத்த தாயே
சத்குருவான தமிழக்கலை ஸ்ரீ முத்துமாரி உமையே!

## 6

செந்தமிழாற் புகழ்ந்திட வைத்திடும் செல்வதியே
சிந்தனைக்குள்ளாகி நின்றாள்பவளே! நீ
சந்ததமும் உன்னடியவரைத் தேடிக்காப்பாய்
சமையபுரத்தசியாய் சகலகலைகளை யூட்டுவிப்பாய்
வந்தனை புரிந்து வாதாடுமடியேனை காத்திடும
வாலை சரஸ்வதி நீ வீரமாகாளி துர்க்கையே!
மந்திர வேதமயமானவுருவாகி வரும் திரிபுரையே!
மனதாற்றியாள் தமிழக்கலை ஸ்ரீ முத்துமாரி உமையே!

## 7

வேதபுராணங்களை கற்பிக்கும் பாடுமலங்காரியே!
விஞ்ஞானம மெய்ஞான மூட்டும் வித்தகி நீ
சிதப்புனலூட்டும் அறுபத்து நான்கு கலையுமானவளே.
சிற்பரத்தற்புதமாயாடி அகிலமெலாம் ஆள்பவள் நீ
நாதகீத முடன் கவிக்குயிலெனக் கூவி நின்றே
நல்லடியாருடன் கூடிவிளையாடிக் கசிந்துப்பாடிக்
காதலுறும அடியேனைக் கூடக் கண்பார்த்திரங்கியாழும்
கருமாரி தமிழக்கலை ஸ்ரீ முத்துமாரி அம்மையுமையே!

## 8

காயத்துள் இருக்கும் போதுனை நம்பி என்றும்
கண்கசிந்துருகி நொந்து கலங்கி வாடி
ஓயாதுன் திருநாம மோதுகின்றனுன் காது மந்தமோ?
ஊரார்பழிக்கவுன் திருவடி தேடியுலையலைத்தாய்
நாயாகியலைந்தேம் நாடிழந்தேன் வீடிழந்தேனம்மா
நமக்கிது விதியோ? இக்கலிகாலத்தென்மதி கெடுத்திடினும்
வாயார வாழ்த்திப் போற்றிட வைத்திடும் பெற்றவளே?
வந்தான் தமிழக்கலை முத்துமாரி உமையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9

கண் கண்ட தெய்வமெனத் தீபாராதனையில் யுந்தன்
கருணையுரு விளங்குதம்மா காத்திடும்
உண்மையுருக் காட்டியுள மகிழச் செய்திடாயோ?
ஊழ் வினை போக்கி வாழ்விக்கும் வல்லவளே!
விண்ணெலாம் பரவி எங்கும் நிறைந்தாடும் சத்தி
வேத நெறி முறையூட்டி வாழ் விக்க வல்ல வித்தகி விமலனி
எண்ண மெல்லாம் உன்னருட் சரஸ் கலாமணி ஓசையூட்டிட
எமைக்கார் தமிழக்கலை ஸ்ரீ முத்துமாரி உமையே!

## 10

வேறு சந்தம்

குருவுமானவள் பெற்ற தாயுமானவள் என்
குலமுமானவள் உலகிற் சோதி ஆனவள
கருவிலானவள் கற்பகத்துருவுமானவள்
கற்க வைத்தே தன்னருளைக் காட்டி நிற்பவள்
திருவுருமானவள் திரிபுரை துர்க்கைத் தாயுமானவள்
திருவருளைத் தந்து காக்கும் தெய்வமானவள்
அருவுமுருவுமாகி அனைத்துமானவள் அன்பு காட்டி
அனைத்தாளும் தமிழக்கலை ஸ்ரீ முத்துமாரி உமையே!

*ஸ்ரீ கவி சரஸ கலாமணி*
*ஸ்ரீ வாலை சரஸ்வதி தேவஸ்தானம் அறங்காவலர்*
*வைத்திய ஆச்சாரி காலரநகர் 05- 06- 2000*

## எம் தாயே வாழ்விப்பாயாக

குல தெய்வமானாய் குருவுமானாய்
நலமெல்லாம் நமக்கென்றுமாக்கி
தலை சிறந்த கலைகளையும் மூட்டி வந்தே
நிலை தவறு துன்னடிமை ஆக்கினாயே!

எக்காலம் வரைக்குமே இங்கிருப்பாயம்மா
தகக தாய் எம்மிதயத் துள்ளாகி வந்தும்
மிக்கவேன் நாவிருந்தும் ஆழ்வாய் அம்மா
பக்குவமாய் உலகுள்ளவரை காத்தாள்வாயே!

விதி எல்லாம் உண்மையே இருக்கக்கண்டேன
நிதியுதவு கதி எலாம உன்னாலத்தானே!
புதிய தெலாம் புதுமை எனக் காட்டுவாயே!
சதி செய்வாரை விலக்கி வாழ்விப்பாய் தாயே!

*ஸ்ரீ கவிசரஸ் கலாமணி*
10- 01-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி ஓம்

# தமிழக்கலைத்தாய் எல்லாம் தருவாள்

அன்புள மெல்லாம் ஆனவளே!
இன்ப இசைகளை மீட்டிடம்மா
அறிவை வளர்த்திடும் கலைமகளே!
குறிப்பறிந் துதவிடும் சரஸ்வதியே
கல்வியைத் தந்திடும் தாயாரே!
எல்லாமீந் தருள் எம்குருவே
கருப் பொருள் திருபுரை ஆனவளே!
விருப்பொடு பெற்ற விண்ணவளே!
உண்மையைத் தூண்டிடும் உத்தமியே
எண்ணத்துள் நிறைவாய் இமையவளே!
ஒளிபெறச் செய்வாய் கருமாரி
களிப்புற வைப்பாய் கண்மணியே
மெஞ்ஞான மூட்டும் திரிபுரையே
விஞ்ஞானம் தந்திடும் விமலினியே
ஏட்டினில் இருப்பாய் சரஸ்வதியே
வீட்டினைச் சேர்க்கும் கலைவாணி
வீணைகள் மீட்டிடும் இணைவாணி
மோனத் திருந்தாட்டும் முப்பொருளே!
சரஸ் கலாமணி ஓசையுள்ளே
பிரணவப் பொருளாய் இருப்பவளே
அடியேனைத் தாங்கும் ஆதிசத்தி
படித்திட வுணர்த்தும் பராசத்தி
எல்லாத் தொழிலும் உன்மயமே
பொல்லாங் கெல்லாம் தீர்த்திடுவாய்
கற்பகத்துக் கொடி ஆனவளே!
நற்பதங் காட்டும் மாரி அம்மா
பொற்பதஞ் சேர்ப்பாய் பூரணியே
கற்பகத் தெல்லாமுன் செயல்தானே
வேள்வியைத் தாங்கும் வித்தகியே
ஆள்வாய் வாழ்க்கையைச் சிறப்புறச்செய்
ஈர் ஏழுலகும் உன் மயந்தானே
சீர்பதினாலும் தந்திடும் செல்வதிலே
சரணம் சரணம் தாமரைமேற்
சரணம் சரணம் தவ்கழலே!

*தற்போது தமிழக்கலை ஆலயம்* ***11 - 6 - 2000***
***தர்மகர்த்தா ஸ்ரீ வாலை சரஸ்வதி*** *ஆலயம்* ***ஸ்ரீ சவிசரஸ் கலாபணி***
*காரை நகர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக்கலைத் தென்றல் தேனமுது

## 1

என்னறிவைத் திருத்தி உதவிடவே
ஏரம்பர் பொன்னடி முன்காக்க
பொன்னார் அடியிற் படைப்பதெல்லாம்
பூ வைத்துப் போற்றினேன் ஏற்பாயே!
என்று முன் கடைக் கண்ணால்
எம்மைக் காத்திட வந்திடம்மா
நன்றே தமிழக் கலையில் இருப்பவளே!
நவரெத்தினச் சுடர் சுட்டும் மாரியம்மா

## 2

காயத்திரியே! பிரவைத் தாயுமையே!
கருணையைத் திரங்கிக் காத்திடுவாய்
மாயமனத் திருள் நீங்கியே அருளுதவி
மனதறிவை பக்குவப் படுத்திடம்மா
தூய புழன்களை உன்மயமாக்கியே
துன்பம் நீக்கி ஆண்டணைப்பாய்
காய மழியுமுன் கருத்துள் வந்திருந்தே
காப்பாய் தமிழக்கலை முத்துமாரியம்மா

## 3

எவற்கும் இனியவை இயற்றிடச்செய்
எதற்கும் இனிய தமிழ் ஓதிடச்செய்
தவத்தாற் சொற் புலமை தந்தருளுவாயே
தேவர்க்கும் மனிதர்க்கும் இதமாக்கி
நாவலர் போற்றும் திருமகளே யுன்புகழ்
நற் செவ்வாய் புகட்டும் வார்த்தைகளை
பாவலர் நாவில் இன்னிசை யூட்டும்
பசுங்கிளியே தமிழக்கலைப் பார்வதியுமையே

## 4

மந்திரத் துள்ளான மாயவளே!
மாதிருநீறறின் ஒளிவிளக்கே
தந்திரக் குங்குமச் சுடர் நவமணியே
தடுத்தாட் கொள்வாய்சத்துருக்களையே!
இந்திரியச் சத்தி விததகியேமின்
விண்மீன் ஒளி தர விளைபவளே!
வந்திருந் தெம்மறிவைக் காத்தருள் என்றும்
வருவாய் தமிழக்கலை முத்துமாரியம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

எங்கும் நிறைந்த ரவிச் செஞ்சுடரே
    ஏற்கும் மும்மூர்த்திக்கும் இதமாவாய்
தங்கி இதயத்துட் புகுந்தாட்டிடுவாய்
    தனையரைக் காத்தாளும் திருமகளே!
பொங்கிடும் புனிதத்தமிழ் வேதம்
    பூம்பொழிற் தென்றலாய் வீசிடுமே!
பங்கடனிருந்தாட்டிடும் சரஸ்கலாமணி ஓசை
    பாவம் போக்கும் தமிழக்கலைத் தேனமுதே

08 - 06 - 2000

தமிழ்க்கலை ஆலய அர்ச்சகர் ஸ்ரீகவி சரஸ்கலாமணி
ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் தேவஸ்தானம்
தர்மகர்த்தா
காரைநகர்

### முன்னவனைப்பணிந்து எல்லாம் பெற்றுய்யலாம்

#### அகவற்பா

ஆதி விநாயகன் ஐங்கர மூர்த்தியை
சோதி ஓங்கார முதல்வனைப் போற்றி
எல்லாம் பெற்று என்றுமே வாழலாம்
பொல்லாப் பெல்லாம் போற்றிரு வாயென
    சித்தி விநாயகச் சிவனுமை மைந்தனை
    புத்திதம் தெமைப் புனிதரா யாக்கென
பிரவை மூர்த்தியைப் பேருவேத காரணனை
அரன் மூன்றெரித்த அடிமூல மூர்த்தியை
    என்றுமே தொழுது எம்வாழ் வுயர்ந்திட
    கண்மூன் றுடைய மும்மதச் சுவட்டனை
ஆனைமுகத் தனை அழகுச் செஞ்சடையனை
யானை வயிற்றனைப் பரம்பொருள் மூர்த்தியை
    பிரணவப் பொருளனைப் பெரும்பேறு பெற்றிட
    சரணம் என்றே குட்டிக் கரணமிட்டும்
சிந்தையுள் இருத்தியெம் சீர்வாழ் வோங்கிட
மூந்தை முதல்வனை முப்பரம் பொருளனை
    தன்றே தொழுது நலமெலாம் பெற்றே
    இன்னில மீதென்றும் ஈடிலாவாழ்வெய்திட
அகக்கண் திறந்துமே அருள்பெற்றென்றும்
மிகமிகச் செல்வம மேன்மேலும் பெற்று
    வித்தைகள் கற்று விளங்கிட வுலகில்
    வைத்திடுவோனை வாழ்தி ஏத்திட நாம்
அச்சம் தீர்க்கும் ஆனை முகத்தனைப் பணிந்து
இச்சக மீதே இன்ப மாய்வாழ் வோங்கிட
    எமக்கு வேண்டிய தெல்லாம் பெற்றே
    அமைதி பெற்றுய்து அருளோடு வாழ்ந்து
அறம்பொருளின்பம் வீடெலாம் பெற்று
இறவாப் பேரின்பம் என்றும் மேலோங்கிட
    நற்பதம் தொழுதே நானில மீ தென்றும்
    பொற்பதம் பணிந்து போற்றி வாழ்வோமடா

ஸ்ரீ கவி சரஸ்கலாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 - 2 - 2000

உ

# திருவருள் மாலை

## ஸ்ரீ கவிசரஸ் கலாமணி அஷ்டகம்

1 அன்புகத்தான அணு மாலை -எமக்
கருள் தரும் என்றும் செபமாலை தன்
இன்பமெலாந்தரும் பொன் மாலை தினம்
துன்பம் போக்கிடும் திருவருள் மாலை

2 ஆனைமுகத் தப்பனுக்கு முன்மாலை என்குரு
வானைக் காட்டினர்கும் ஒளிர்மாலை முன்னம்
ஊனைப் படைத்தவர்க் தணிமாலை என்றும்
தேனைச் சுவைத் தறிந்தார்க்கென் பொன்மாலை

3 ஒளி ஒலி வடிவாய் ஓசையெங் கெங்குமாம்
களிப்புற வைக்கும் காட்சியின் கலைவடிவே?
அழிப்பாய் ஆக்குவாய் ஊக்கமூட்டி ஏற்பாய்
களிப்புடன் கூட்டிக் கலந்திருந்தாள்பவர்க்கே

4 திருவருள் கூட்டிடும் ருத்திராக்கம்
கருவினுள் கலந்திடும் கவி மாலை
அருள் பெருகச் செய்திடும் செபமாலை
பொருள் தந்து காத்திடும் திருமாலை

5 முத்தொளி வீசிடும் முகமாலை அவள்
புத்தொளி வீசிடும் அகமாலை என்
பத்தியைக் கூட்டிடும் பரன்மாலை அவள்
சித்தியைத் தந்திடும் சிவன்மாலை எனக்கே

6 சத்தியின் அருள் தரும் அன்பரகமாலை
முத்தியைத் தந்திடும் முத்துமணிமாலை
எத்தினமும் காக்குமே நவரெத்தின மணிமாலை
மெத்தவருள் கூட்டிடும் துளசி மணிமாலை

7 நந்தாவனத் தெடுக்கும் மலர் மாலை போல்
எந்நாளும் மணந்தருமென் கவிமாலை
சிந்தாமணி ஒளிவீசிடும் பூமாலை எம்முள்
எந்தாயேந்திடும் எழில் ஒளிச்சுடர்மாலை

8 சரஸ்மாமணிப் புகழ் திருப்பாமாலை நல்
அரசர் புகழ் ஏந்தும் தபமாலை தாயின்
பரம்பொருள் தந்திடும் பாமாலை தினம்
சரம் சர சரமெனக் கூடிவருமென் அணுமாலை

ஸ்ரீ கவிசரஸ்கலாமணி அவர்கள்

10 - 2 - 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நம் தாயார்?

தேவாரப்பதிகம்

இராகம் ஆரபி　　　　　　　　தாளம் ஆதி

1 முக்கனியும் முப்பாலும்
　　தேனமுதுடனே சர்க்கரையும்
எக்காலுந் தந்தென்னை
　　ஏந்தி வளர்த்த தாயாரே
தக்கதொரு வாழ்வுதவித்
　　தமியேனைக்காத்தாளாயோ?
மக்களை நீ மனதார
　　வைப்பது முந்தன் செயலிலையோ?!

2 பாலூட்டும் காலத்தில்
　　பகுத்தறிவை யூட்டிலையேன்
நூலூட்டி வைப்பதற்கு
　　குழந்தை என்றோ அறிந்தென்னை
தாலாட்டி மடியேந்தி
　　பசிதீர்த்தும் பார்த்தணைத்தாய்
தாலாட்டித்தாலாட்டித்
　　தேன்தமிழை ஊட்டிவைத்தாய்

3 எனக்கேத்தெரியும் அப்போது
　　யானும் உந்தன் குழந்தை என
எனக்கே தெரியா தாக்கியதார்
　　என்றே தெரியா தென்விதியோ?
தனக்கே எல்லாந்தெரிந்திருந்தும்
　　தானே! என்னை வாழ்வித்தாய்
தனக்கே எந்தன் உடல் பொருளாவி
　　அத்தனையும் உமக்கேதான்

4 சின்னவயதிற் செல்லமதாய்ச்
　　சேர்ந்தும் கொஞ்சி வளர்த்தாயே!
அன்றே எந்தன் மனந்திருத்திப்
　　பழக்காதென்ன? தாயாரே!
என்மனத்தாசை தெரிந்திருந்தும்
　　நீ பற்பல பண்டங்கள் தந்தவளே!
அன்னமேயுன் குணம் தந்தும்
　　அறிவைப் புகுத்தினாயில்லையே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 சொன்ன மொழி தட்டினளோ!
என்னருமைத் தாயாரே!
வண்ண இடை மடியேற்றி
மடியேற்றும் மதி வழங்கலையே?
பொன்னடியை இக்காலம் பொருத்த
வைத்தென்னையாளாயோ?
முன்னவளே! என்பிழைகள்
முழுதும்பொறுத்தருள் அம்மாவே.

6 கண்கண்ட தெய்வமென
அறிவாளர் உனைக்காட்ட
விண்ணளந்த உருவமுனை
விஞ்ஞானர் கண்டறிவாரோ?
மண்கண்ட மெஞ்ஞானர்
படிப்படியேறியுனைக்காண்பார்
எண்ணெழுத்தை விளக்காமல்
எனையிங்கேனோ? மயங்கவிட்டாய்

7 அம்மாவுந்தன் சொற்றட்டி
வளர்ந்தேனோ என்மதிகெட்டு
இம்மானிலத்தே யிகழ்ந்தென்னை
இன்றேன் பழிக்க விடுவாயோ?
சும்மா சிரித்து வளர்த்தாசை
செல்லப்பிள்ளை ஆக்கினையே?
எம்மானிலத்திலினியுன்னை
எங்கே கண்டு முய்வேனாய்.

8 மன்னே! மணியே! மாதாவே!
மனதாரச்செய்யின் நாளில்
முன்னாட் செய்த பிழை பொறுத்து
முன்வந்தென்னை ஆளம்மா
கண்ணுள் உயிராய் நீ நின்றே
கருத்திலிருந்து வழிகாட்டும்
என்றும் என்மனதாற்றலை நீ
ஏந்தி அடக்கி ஆண்டிடம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9

மாத உன்மெய் உருக்காட்டி
மனதை உனதே ஆக்கிடம்மா
வேதா வேதாந்த வித்தகியே!
வித்தை எல்லாம் உணர்த்திடம்மா
மாதா தாயே! மனதிரங்கி
மதியணி முடியிடைசேரம்மா?
தூதாமுந்தன் குருமாரின்
ஞானமுணர்த்திக் காத்திடுவாய்

## 10

பத்தி மிகுதி ஆனதினாலிப்
பதியில் வந்தேனுன்னருளால்
சத்தியநாளட்சரஸ் கலாமணியின்
சித்தியினோசை யிங்குலவ
நித்தமுந்தன் நினைவதனால்
உருகிவாடித் தவிக்கின்றேன்
கத்திக்கதறிட வையாது
காத்திட வேண்டும் மாதாவே!

சுக்கிரவார மௌவுன உண்ணா விரதர்
ஸ்ரீ சரஸ் கலாமணி அவர்கள் ஆக்கம்

இத்தேவாரப் பதிகத்தைப் பாலர்களும் பெரியோர்களும் பாடிப் போற்றி வருவோமாயின் கல்வி ஞானமும் செல்வமும் பொறுமையும் அன்பும அருளும் தக்கதோர் பூவுலக வாழ்க்கையும் அமைந்து புத்திரச் செல்வமும் பெற்று பேரின்பமும் பெற்று வாழ்வார்கள் என்பது திண்ணம்

ஸ்ரீ கவிசரஸ் கலாமணி

உ

# தமிழ் இசைத்தென்றல்

1 ஆழமுணர்ந்த அறிஞர்கள் ஓங்கிட
வேழமுகன் துணையே!
ஈழம் வாழ்க தமிழ் மொழிவாழ்க
ஏழைகள் உயர்த்திடவே!

2 சீரோடு வாழ இலங்கை மக்கள்
சேர்ந்து வாழ் வோங்க
பேரோடு குயில்கள் கூவிடும் எங்கும்
பேரழகு மயில்கள் ஆடிவர

3 இச்சதமீது சரஸ் கலாமணியோசை
என்றும் கேட்டிசைக்க
அச்சமிலாது எங்கள் வாழ்வோர்
அறிந்து மகிழ்ந்துய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 மலைகளைப் போலும் மக்களோங்கிட
கலைகளைக் கற்றறிவோர்
நிலையிலா யாக்கை நிலைப்பட வாழ்வில
கலைஞானம் பெற்றிடுவோம்

5 தாய்மொழி அறிந்து சேயெனக்கற்று
வானமுணர்ந் தளப்போம்
மெய்ஞானம் பெற்று விஞ்ஞானங்கற்றும்
மேன்மேலும் உயர்ந்திடுவோம்

6 நலிமிடி தொல்லை கரிந்து பொரிந்திடக்
கலிகாலன் தொலைந்திடவே!
மலிந்து பொலிந்திடும் மக்கள் வாழ்வு
மதிமலர்ந்து வளர்ந்திடவே.

ஓம் சக்தி ஓம்

# எங்கள் முத்துமாரி

அம்மா தமிழ்க் கலைவந்தோம்
அன்புடன் காப்பாய் இதுவேளை
இம்மா நிலத்தே எமைஆக்கிப்
படைத்த பரா பரிநீயே
செம்மை வாழ்விலே எம்மைச்
சிறப்பாய் இருக்கச் செய்வாயே
தம்பொன் அடிமறவா திருக்கச்செய்
தழுவிப் போற்றியே வாழச்செய்
குங்குமந் தந்தெம் பிணிகளையே
தீர்ப்பாய் தினமவந்து காப்பாயே
பங்கயப் பாதம் பணிந்திடச்செய
பறந்து வந்திட அருள்வாய்
சங்கம் போற்றிடும் சங்கரியே
சமைய புரத்தெம் மாரியம்மே!
தங்கப் பொக்கிசக் கருவுருவே!
தண்ணருள் ஈந்தும் காப்பாயே!
கரங்களில் ஏந்தும் வேப்பிலையால்
காப்பாய் பிணிகளைத் துடைப்பாயே!
சரஸ்மணி ஓசையில் நிற்பவளே!
சரஸ்வதித் தாயும்நீ தானே!
பரம்பொருட் சோதி ஆனவளே!
பக்குவப் படுத்திப் பராமரிப்பாய்
தரமறிந் தெம்மைக் காப்பவளே!
தமிழ்க் கலைமுத்து மாரியம்மா.

10 - 06 - 2000
சுக்கிரவார மௌன உண்ணா விரதி
ஸ்ரீகவி சரஸ்கலாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்

6ம் திருமுறைப் பண் தாண்டகக்குறிஞ்சி
இராகம் அரிக்காம போதி

## தேவாரப் பண்

நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
நாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கர நற்சங்கவெண் குழையோர்காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.
தேவாரப்பண்

## திருநீற்றுப் பதிகம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயாந் திருநீறே.

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்பிலா வானந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனை
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந்தனவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
 பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் மன்று அருள் செய்தவன்
 மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ் கின்ற தில்லைச்
 சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புகழ்

உம்பர் தருத்தேனு மணிக் கதிவாகி
 ஒண் கடலிற் தேனமுதத் துணர்வூதி
இன்பரசத் தேன்பருகிப் பலகாலும்
 எந்தனுயிர்க்கு ஆதரவுற் றருள்வாயே!
தம்பி தனக்காக வனத் தணைவோனே
 தந்தை வலத்தாலருட்கைக் கனியோனே
அர்பர்தமக்கான நிலைப் பொருளோனே
 ஐந்துகரத்தானை முகப் பெருமானே!

# திருப்புராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு மோங்கக் குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## மங்களம்

ஓம் ஆம் எம் பிள்ளைக்கு மங்களம்
ஓம் சரவண பவர்க்கும் மங்களம்
அன்னை சிவன் சத்திக்கும் மங்களம்
அன்பரடியார்க்கெல்லாம் மங்களம்

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருவருள் மிகு ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பிகை தேவஸ்தானம்
பிரம்மரிஷி ஆச்சிரமம்-காரைநகர்

# ஸ்ரீகவி சரஸ்கலாமணி அவர்கள் யாத்தருளிய வெளியீடுகள்

01. ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் தோத்திரபாமாலை (தொகுப்பு)
02. நயினாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்பாள் பத்திரசப் பாமாலை
03. இணுவில்—ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் இரத்தின மணிமாலை
04. காரைநகர் தோப்புக்காடு— ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவூஞ்சல் பதிகம்
05. காரைநகர்— ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமாள் கிள்ளை விடு தூது
06. வியாவில் காரைநகர்— ஐயனார் திருப்பொன்னூஞ்சல் பதிகம்.
07. எங்கும் நிறைந்த— ஸ்ரீசுப்பிரமணியப் பெருமான் திருப்பதிகம்
08. காரைநகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருப்பதிகம்.
09. நுனிப்புரம் ஊர்காவற்றுறை திருப்பொன் ஊஞ்சல் பாமாலை
10. சிவன் ஊர்காவற்றுறை அன்பருளப் பாமாலை
11. இராதோட்ட காரைநகர் ஸ்ரீ இராசராசேஸ்வரி அம்மன் திருப்பொன் பாமாலை
12. நீலிப்பந்தனை காரைநகர்— துர்க்கை அம்மன் பதிகம் பேரின்பக் காதல்— திருப்பொன்னூஞ்சல்
13. ஸ்ரீ முத்துமாரியம்பாள் மயில் விடு தூது— காரைநகர்
14. ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள்— கவிப்பூந்துணர்
15. வட்டுக்கோடடை சின்னக் கதிர்காமன் பேரில் ஸ்ரீமுருகப்பெருமான் பதிகம்
16. பேரின்பக் காதற் சிந்து— பேரின்பக் கும்மி கீர்த்தனைகள் நாமவளிகள்
17. காரைநகர் ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் பேரில் நாமகள் இசை ஞானப் பொன் ஏடு
18. கிராஞ்சி பட்டியன் மோட்டை ஸ்ரீ நாகபூசனி அம்பாள் பாமாலை அஞ்சல் பஜனைப்பாமாலை அஞ்சல்
19. கிராஞ்சி சிவபுரம்— சிவன் ஊஞ்சற் பாமாலை அச்சில் ஸ்ரீ முருகன் பஜனைப்பாமாலை.
20. வவுனியா தேடிவந்த பிள்ளையார் திருப்பதிகம் அச்சில்
21. அக்கரபத்தனை மோர்சன் தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருப்பொன் ஊஞ்சல்பாமாலை.
22. பேரின்பஞான தீபப் பிள்ளையார்— தாயார் மல்லாந்தை
23. நோர்வூட் சித்திவினாயக திருப்பொன் ஊஞ்சல்
24. கற்றன் பொன்னகர் சித்தி வினாயகர் திருப்பொன் ஊஞ்சல்
25. செல்வக்கதிர்காம மாணிக்கபிள்ளையார் திருப்பொன் ஊஞ்சல் பதிகம்.
26. குயின்ஸ்பரி ஸ்ரீ தேவசேனாதிபதி திருப் பொன் ஊஞ்சல் பாமாலை
27. உடஹேன்தனை — ஊஞ்சல் பதிகம்
28. நாவல்நகர் கதிரேசன் குமார வித்தியாலய விநாயகர் ஊஞ்சல் பதிகமலர்
29. அக்கரப்பத்தனை மோர்சன் தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் வலம்புரி பாமாலை
30. அக்கரப்பத்தனை வேவள்ளி குரூப் ஸ்ரீ முத்துமாரியம்பாள் திருவூஞசல் பதிகமலர்.
31. அக்கரப்பத்தனை வேவள்ளி தமிழக்கலை பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருப்பொன்னுஞ்சல் பதிகமலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் ஈஸ்வரா குருதேவா

# சத்தியத்தின் சக்தி நிலைச் சங்கம்
## நாவல் நகர் கிளை—(இலங்கை)



## வாழ்த்துரை

அம்பிகையின் அருளைப் பெற்று

அசலகன்னிகை நாமத்தையே- போற்றி

அகப்புமிகு கவிப் புனைந்து

அகப்பூமகிழ- பாமாலை சூட்டி

அகப்பணியாற்றும்

அமுத கவி- ஸ்ரீ கவிசரஸ் கலாமணி

அவர்களே' நுங்கள்

அகைத்தல் தொடரட்டும்

அலங்காரப் பந்தலாக'

செ. விஜயகுமார்
அமைப்பாளர்/செயலாளர்
(ச.ச.நி.ச)

ஏ.வீ.எஸ்.அச்சகம் பத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org